ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

# ॥ சாற்றுமுறை ॥

## (தென்கலை ஸம்ப்ரதாயம்)

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சாற்றுமுறை ॥
(தென்கலை ஸம்ப்ரதாயம்)

சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து⋆ உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்⋆
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து⋆ நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது⋆
இற்றைப் பறை கொள்வான் அன்றுகாண் கோவிந்தா !⋆
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்⋆ உன்றன்னோ-
டுற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்⋆
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்

வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை⋆
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி⋆
அங்கப் பறை கொண்டவாற்றை⋆ அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன⋆
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே⋆
இங்கிப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள்⋆
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்⋆
எங்கும் திருவருள் பெற்றின்புறுவர் எம்பாவாய்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு⋆
பல கோடி நூறாயிரம்⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா !⋆ உன்-
சேவடி செவ்வி திருக்காப்பு

அடியோமோடும் நின்னோடும்⋆ பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு⋆
வடிவாய் நின்வல மார்பினில்⋆ வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு⋆
வடிவார் சோதி வலத்துறையும்⋆ சுடராழியும் பல்லாண்டு⋆
படைபோர் புக்கு முழங்கும்⋆ அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

www.prapatti.com

ஸர்வதே$_3$ஶத$_3$ஶாகாலேஷ்வவ்யாஹதபராக்ரமா ।
ராமாநுஜார்யதி$_3$வ்யாஜ்ஞா வர்த$_4$தாமபி$_4$வர்த$_4$தாம் ॥

ராமாநுஜார்யதி$_3$வ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா ।
தி$_3$க$_3$ந்தவ்யாபிநீ பூ$_4$யாத்ஸா ஹி லோகஹிதைஷிணீ ॥

ஶ்ரீமந் ஶ்ரீரங்க$_3$ஶ்ரியமநுபத்$_3$ரவாமநுதி$_3$நம் ஸம்வர்த$_4$ய ।
ஶ்ரீமந் ஶ்ரீரங்க$_3$ஶ்ரியமநுபத்$_3$ரவாமநுதி$_3$நம் ஸம்வர்த$_4$ய ॥

நம: ஶ்ரீஶைலநாதா$_2$ய குந்தீநக$_3$ர ஜன்மனே ।
ப்ரஸாத$_3$லப்$_3$த$_4$ பரமப்ராப்ய கைங்கர்யஶாலிநே ॥

ஶ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ர ப்ரவணம் வந்தே$_3$ ரம்ய ஜாமாதரம் முநிம் ॥

வாழி திருவாய்மொழிப்பிள்ளை மாதகவால்
வாழும்⋆ மணவாள மாமுனிவன் - வாழியவன்⋆
மாறன் திருவாய்மொழிப் பொருளை⋆ மாநிலத்தொர்
தேறும் படியுரைக்கும் சீர்

செய்ய தாமரைத் தாளிணை வாழியே⋆
சேலை வாழி திருநாபி வாழியே⋆
துய்யமார்பும் புரிநூலும் வாழியே⋆
சுந்தரத் திருத்தோளிணை வாழியே⋆
கையுமேந்திய முக்கோலும் வாழியே⋆
கருணை பொங்கிய கண்ணிணை வாழியே⋆
பொய்யிலாத மணவாள மாமுனி⋆
புந்தி வாழி புகழ் வாழி வாழியே

அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ⋆
சடகோபன் தண்டமிழ் நூல் வாழ⋆ - கடல் சூழ்ந்த
மன்னுலகம் வாழ⋆ மணவாள மாமுனியே!
இன்னுமொரு நூற்றாண்டிரும்

கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழுமூர்⋆
சோதி மணி மாடம் தோன்றும் ஊர்⋆ - நீதியால்
நல்ல பத்தர் வாழும் ஊர்⋆ நான்மறைகள் ஓதுமூர்⋆
வில்லிபுத்தூர் வேதக் கோனூர்⋆
பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடி காட்டும்⋆
வேதம் அனைத்துக்கும் வித்தாகும்⋆ கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை⋆
வையம் சுமப்பதும் வம்பு

திருவாடிப் பூரத்து சகத்துதித்தாள் வாழியே⋆
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே⋆
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளை வாழியே⋆
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே⋆
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே⋆
உயர் அரங்கற்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே⋆
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே⋆
வண் புதுவை நகர்க் கோதை மலர்ப் பதங்கள் வாழியே

|| ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம் ||

www.prapatti.com